திரு. எஸ். ஆர். பஞ்சாட்சரம்,
சிவதாபுரம்,
சேலம்,

2/2

வைத்திய முறை அட்டவணை - கட்டு. 1."

தேதி: 23.10.63.
உரிமையாளரின் பெயர்: எல்.ஆர்.பஞ்சாட்சரம்.
ஓலைச்சுவடியின் பெயர்: வைத்திய முறை அட்டவணை கட்டு-1.
இடம்:-சிவதாபுரம், சேலம்.

347

* * *

வைத்திய முறை அட்டவணை - 1.

வெள்ளைக்கு மருந்து:-

தேங்காய் திருகி பால் பிழிந்து சட்டியிலூற்றி எரித்தால் எண்ணெய் வரும். அப்பொழுது அதை அடியிலெடுத்து வைத்து எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு சீனி கல்கண்டு நறுக்கிப் போட்டுக் குடித்தால் வெள்ளை நிற்கும்.

347

கடுப்புக்கு:-

சாதிக்காய், கசகசா சன்ன லவங்கப் பட்டை கல்நார், நெய் இதை யெல்லாம் ஒன்றாகக் கூட்டி அரைத்து நெய்யில் கொடுத்தால் கடுப்பு தீரும்.

அதிசாரத்துக்கும் அண்டக் களிச்சலுக்கும்:-

ஏலரிசி நல்ல சந்தனம், எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும்.

கண் கலிக்கம்:-

இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி, நந்தியாவட்டைச் சாற்றில் நயந்தரைத்திட மந்தமா நேத்திர வாய்வைப் போக்கிடும் அந்த கன கண்ணுக்கு அருந்ததி காணுமே.

ஒதட்ட வாதத்துக்கு மருந்து:-

திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, சுக்கு, மிளகு, இந்துப்பு, வகைக்கு விராகனிடை.க, களச்சிக்காய்ப் பருப்பு விராகனிடை.6 பொடியாக்கி ஆறு பங்கிட்டு மூன்று நாளைக்கு விளக்கெண்ணெயில் மத்தித்து சாப்பிடவேண்டும். இதற்குப் பத்தியம் உப்பு, புளி மூன்று நாளைக்கு ஆகாது.

சிரங்கு எண்ணெ:-

ஊமத்தங் காயைக் கொண்டு வந்து அதைத் துளைத்து அதற்குள்ளாக கெந்தகம், தத்தம் ரசம் இதை யெல்லாம் போட்டு புடம் போடுகிறது. அதை எடுத்து மருவுச் சாற்றிலரைத்து அதில் நல்லெண்ணெ விட்டு எரித்து தடவினால் தீரும்.

தேள் மருந்து:-

அவுரி வேர், பெருங் கிழங்கு, புகையிலை விரை, மிளகாய் இது மூன்றும் சமனாக கூட்டி எருக்கம் பால் விட்டு அரைத்து குளிகை பண்ணி வைத்துக் கொண்டு எருக்கம் பாலிலாவது கருப்பு வெத்திலைச் சாத்திலாவது உரைத்துக் கொட்டு வாயில் போட்டால் வலி நிற்கும்.

வீரியமுண்டாக அவிழுதம்:-

கஞ்சைப் பிசின் சாதிக்காய் ஒன்று இது இரண்டும் நறுக்கி ஒரு படி பசுவின் பாலிலே போட்டு சுண்டக் காய்ச்சிக் குடிக்கவும்.

மண்டை பீய் நாசிக்கு:- (பீனிச நீர்க்கு)

நூலைப் பாலிலே சென்னாங்குருவிச் சாரம் லவங்கமும் பொடி செய்து போட்டு மூக்கிலே ஊத்தவும் தீரும். திருநீற்று பத்திரியிலைச் சாரம் நெய்யும் சமனாகக் கூட்டிக் காய்ச்சி துன்னுமப்பு ஒரு பணவிடை போட்டு மூக்கிலே ஊத்தவும்.
நாலு பொழுது ஊத்தவும். பீனிசி தீரும்.

பெரும்பாட்டுக்கு:-

தென்னம் பாளையை இடித்து வெள்ளாட்டுப் பாலில் பிசைந்து கொடுத்தால் நிற்கும். நெட்டிப் பேய் மிரட்டி யிலையைத் அவைத்து மோரில் பிசைந்து வடிகட்டி

மூன்று நேரமுங் கொடுக்கவும் நிற்கும்.

ரெத்தம் விழுகிற காசி நோவுக்கு:-

ஒரு கொட்டை வெள்ளைப் பூண்டு வசம்பும் அரைத்து வெள்ளாட்டுப் பால் எலுமிச்சம் பழச்சாறு முள்ளிப் பழச் சாற்றில் கலந்து குடிக்கவும். ரெத்தக் காசி தீரும்.

இடுப்பு நோவு நெஞ்சு முறிவுக்கு:-

உழுந்த மாவு படி.க, புழுங்கலரிசி மாவு படி.க, சாமையரிசி மாவு படி.க, பெரிதாக கருப்புட்டி பலம் அச்சு.10, ஒரு வள்ளந் தண்ணீரில் காய்ச்சி இரண்டு படி பாகான வாறே மூன்று மாவைப் போட்டுக் களிக் கிண்டி இதில் ஒரு படி நல்லெண்ணை விட்டு ஏலாவி சுக்கு பலம்.½, மிளகு பலம்.½, திப்பிலி பலம்.½, ஓமம் பலம்.½, பழம் பலம்.½, தம்பராஉட்டம் பலம்.½, கருஞ்சீரகம் பலம் ½ சாதிக்காய் விராகனிடை.½, குருசாணி ஓமம் விராகனிடை.½ இவை யெல்லாம் இளவறையாய் வறுத்து தூள் செய்து வைத்துக் கொண்டு முன் கிண்டின களியில் போட்டு நன்றாய் கிண்டி வைத்துக் கொண்டு உடம்புக்கு வெந்நீர் வார்த்துக் கொண்டு எலுமிச்சங் காயளவு தின்னவும். இந்தப்படி தப்பாமல் செய்து வரவும். இதுகளுத் தீரும் வியாதி இடுப்பு நோவு, நெஞ்சு முறி வாட்டு இவை யெல்லாந் தீரும். இது கை கண்டது.

எறைகுடல், வாதம, ஊதுகுட்டல் வாதத்துக்கு:-

காவட்டம் புல் ஒரு பிடி வேர், சுக்கு மிளகு, திப்பிலி, வெள்ளைப் பூண்டு வெந்நீர் விட்டரைத்து ஆழாக்கு வெந்நீரில் கொடுக்கவும் நோவு தீரும்.

புழு வெட்டுக்கு மை:-

இலைக் கள்ளி அடி மரத்தைத் துளைத்து.2 கடுக்காய் அடைத்து எட்டா நாளை டுத்தச் சுட்டுக் கொட்டை போக்கிச் சதையெல்லாம் பொடி செய்து பருத்திக் கொட்டை மாத்திரம் சுத்தம் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டுக் கலத்தோடே கலம் வைத்து இளைச்சு சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணிலிடவும். புழு வெட்டுத் தீரும்.

சருவாங்க எரிப்புக்கு:-

பெரும்பூளை வேர் சிறநெருஞ்சி வேர், பழம்பாசி வேர், முத்தக்காசு சந்திக் கொடி, கஞ்சாங்கோரை, சுக்கு இந்த மருந்தெல்லாம் வகைக்கு விராகனிடை.க, கூட்டி இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காக காய்ச்சிக் குடிக்கவும். இரண்டு நேரங் குடிக்கவும். துவரை பச்சைப் பயறு ஆகும்.

ஏலம் ஒரு பலம், சீரகம் இரண்டு பலம், கருஞ்சீரகம் இரண்டு பலம், இது சூரணம் பண்ணி நாயத்துக்கு சரி சர்க்கரை கூட்டிப் பசுவின் வெண்ணையில் கலந்து முழுங்கவும். சரீரம் யெரிப்பு நிற்கும். நெய், பச்சைப் பயறு பத்தியம் ஆகும்.

நீரடைப்புக்கு:-

சங்கிலை, பச்சை நெல்லுமி வெங்காயம் இது மூன்றும் துவைத்துப் பிளிந்து குடிக்க உடனே நீரிறங்கும். ஆதண்டை யிலையைத் துவைத்து மோரிலாவது குடிக்க நீர் விழும். காராட்டு மோரிலாவது கொடுக்கவும். சிந்திக் கொடி பஞ்சு போல் நருக்கின தேங்காயளவு ஈர வெங்காயம் ஒரு சேரை அரிந்து போட்டு வறுத்ன த்தில விளக்கெண்ணை படி.½ கூடப் பதமா எரித்து பெரியவர் களுக்கு கால்படி கொடுக்கச் சலம் விடும். இது திட்டம்.

சுரத்தின் மேல் விக்கலுக்கு:-

மயிலிறகு அடிப்புறமா கட்டும் நுனிப் புறமா கட்டும் சுட்டு தேனில் குப்பிரை வில் தடி தடவித் தொண்டைக் குழியில் தடவவும். விக்கல் நிற்கும்.

விக்கல் சத்திக்கு :-

நீடு மாதளை நெல்பொரி சர்க்கரை தேடு திப்பிலி தேனுடன் கோஷ்டமும்
பீடை செய்யும் பெரியதோர் விக்கலும் ஓட ஓடத் துரத்திடும் உண்மையே .
பூளை வேர்தழை போத வரைத்திரு நாழி மோர் தனை நல்கில் வல----
யாக நேக படர்ந்திடும் விக்கலும் லதரவென விரைந்தோட ஓடுமே.

சுரத்துக்கு கசாயம் :-

சுக்கு, திப்பிலி, சித்தரத்தை, மிளகு இதையெல்லாம் நல்ல சூரள் செய்து மூத்திரம் வார்த்தரைத்து உருண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சீந்திக் கொடி கசாயத்திலுரைத்துக் கொடுக்கச் சுரம் நிற்கும்.

சகல வியாதிக்கு விரேசனக் குளிகை :-

சாதிலிங்கம், வெங்காரம், மிளகு, சுக்கு, திப்பிலி, வசம்பு, இலைக் கள்ளி பட்டை இந்துப்பு, கல்லுப்பு, நேர்வாளம் சுத்தி பண்ணினது இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றிலிரண்டு சாமமரைத்துக் கடலை மாதிரிக் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு வென்னீரில் கழச்சிக்காய் மாதிரி நல்ல வெல்லங் கூட்டிக் குளிகை உரைத்துக் கொடுக்கவும். பின்ப வயறு பேதிக்கும். கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். இதுக்கு தீரும் வியாதி பஞ்ச குன்மம், க்ஷயவியாதி, ஜலந்திரம், பாண்டு ரோகம், காமாலை, அசீரணம், மூல ரோகம், சுவாசகாசம், அழுவை, மகோதரம், பித்தம் இவை யெல்லாந் தீரும்.

சகல தோஷந்தத்துக்கும், குலைக்கும், சிறு புழு மேச்சலுக்கும், கிளி மண்டலத்துக்கும், ஆனைச் சொறிக்கும் இந்த வியாதிக் கெல்லாம் சுக்கு, மிளகு, திப்பிலி இந்தப் பொடியும் மேன் பொடியும் குளிகையுங் கூட்டி இச்சிச் சாத்திவிடவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். எலும்புருக்கிக்கு ஒரு பிடி பன்னி நெய்யில் ஒரு பிடி நற்சீரகம் அரைப்பிடி, மிளகு அரைப்பிடி, மஞ்சள் தூள் இது கொதிக்க விட்டு பதத்திலிறக்கி பதினைந்து நாள் கொள்ளவும். சோத்துக்கும் வாத்து தின்றல் எலும்புருக்கி தீரும். ஒரு படி பசுவின் பாலில் உரித்த வெள்ளைப் பண்டு அரைப்படி போட்டு களாவி லேகியம் போலே காய்ச்சி அதை வைத்துக் கொண்டு தினம் கரண்டி கொள்ளவும்.

வெள்ளைக்கு :-

கருவேலங் காயை இடிச்சு, பிழிந்தால் பால் போல் வரும். 1/8 படி சா பிழிந்து 1/ தயிரும் விட்டுக் குழப்பிக் குடித்தால் நிற்கும். இச்சா பத்தியம்.

விந்துக் கட்டுக்கு :-

வெள்ளாட்டுக் கால் மூளை கோழி முட்டை. க, புறமுட்டை. உ, சாதிக்காய் இதையெல்லாம் ஒன்று கூத்தி மூன்று நாள் வெய்யில் புடம் வைத்து பசம்பால் விட்டு அரைத்து மத்திச்சு வைத்துக் கொண்டு அந்த லேகியம் 8 நாள் தின்றல் தீரும்.

சீரிப்புச்சிக்கு மருந்து :-

நிலாவானர் சமூலங் கொண்டு வந்து நிழலிலுலத்திப் பொடி செய்து வென்னீரில் அதிகாலையில் மூன்று வெருகடிப் பிரமாணம் கலக்கிக் குடிக்க வயற்றிலுள்ள சீரிப் புழு வெல்லாம் விழுந்து போம்.

ஊது காமாலை வறக் காமாலைக்கு மருந்து :-

கடுக்காய் பலம். க, வெள்ளை வெங்காயம் பலம். க, பழைய கோளாங்கிட்டம் பலம். க, அரப்பொடி பலம். க, கையாந்தகரை ஒரு படி, சிலைர்வேம்பு ஒரு கூடை இந்த மருந்தெல்லாம் பொடி பண்ணி எலுமிச்சம் பழச் சாற்றில் ஊறப் போட்டு நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு மோரும் சோறும் குடித்த பின்பு வெருகடிப் பிரமாணம்

தேனில் அடிக்கவும். சோறும் வெந்நீருங் கூட்டவும். இந்தப் படி மூன்று நாள் குடிக்கவும். உப்பு, புளி விடவும். இது கை கண்டது.

பதினெட்டு வகை குன்மத்துக்கு மருந்து:-

கல்லுப்பு மூன்று படி சதிக் கள்ளிப் பட்டை, சிறுக நறுக்கி உலர்த்தியது ஒருபடி வாய் குவிந்த கலையத்திலே 1½ படி உப்புப் பரப்பி அதில் நறுக்கின பட்டையை வைத்து அதின் மேல் மறுபடி ஒன்றரைப் படி கல்லுப்பு வைத்து அடக்கி அதின் மேல் படிகமிட்டு சீலை மண் பூசி பூமி மேல் விரிவு மூன் ஒட்டை அகலம் பூமிக் கீழ் சாமமுச் சாணகலம் குழிவெட்டி இரண்டு சாடு யெருமுட்டை குழியில் போட்டு அதின் மேல் கலையம் வைத்து அதின் மேலே ரெண்டு கூடை எருமுட்டை குதிரில்-பேச போட்டு அக்கினிப் புடமிடவும். பின்பு பற்பமாம்.

ஒரு பலம் சுக்கு, ஒரு பலம் மிளகு, ஒரு பலம் அசமதாகம் இரண்டு காசிடை, பெருங்காயம், இந்தக் கடைச் சரக்கெல்லாம் நிரப்பிக் கொண்டு பொடி செய்து பகலில் நெய்யில் பற்பத்தில் கூட்டிக் கலந்து சரீரம் அறிந்து வெகு கடிப் பிரமாணம் வெந்நீரில் கலந்து குடிக்கவும். இதற்கு தீரும் வியாதி வலி குன்மம், பித்தகுன்மம், வாய்வு குன்மம், குன்மக்கட்டு இது முதலான வியாதியும் தீரும்.

பைத்திய வாத சேத்துமத்துக்கும் தோஷத்துக்கும் குளிகை:-

நிலக்குமிழம் வேர், சிறுதேக்கு, தேவதாரம், பற்படாகம், கடுக்காய் சுக்கு, கொத்தமல்லி, வசம்பு இது வகைக்கு களஞ்சு கூட்டி அஷ்ட பாசமாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

தாகத்துக்கும் தோஷத்துக்கும் குளிகை:-

நிலக் குமிழம் வேர், சிறுதேக்கு, தேவதாரம், பற்படாகம், கடுக்காய் சுக்கு, கொத்தமல்லி, வசம்பு இது வகைக்கு களஞ்சு கூட்டி அஷ்ட பாகமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். தாக

தாகத்துக்கும் தோஷத்துக்கும் குளிகை:-

கோரோசனை விராகனிடை.உ, கிராம்பு ஏலம், சுக்கு, சந்தனம், சீரகம், அதிமதுரம், மிளகு, சாதிக்காய், முத்தக்காசு இது வெல்லாம் சமன் கூட்டி மணத்தக்காளிச் சாறு வார்த்து மூன்று நாளரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி அதுக்கேற்ற கசாயத்திலிடவும்.

தோஷத்திற்கும் தாக சுரத்துக்கும்:-

திப்பிலி, சுக்கு, கோஷ்டம், அதிமதுரம், கிராம்பு, ஏலம், வில்லைவோடு கலங்கொம்பு, அக்கிரகாரம், அரத்தை கண்டு பரங்கி, இது வெல்லாம் சமன் கூட்டி முலைப்பால் வார்த்தரைத்து முலைப்பாலில் கரைத்து கண்டவிஷ்டதம் பண்ண தோஷந் தீரும்.

இன்னம் தோஷத்துக்கு நெல்லுப் பொரித்துக் கொட்டிக் கொண்டு அதில் பொரியாத நெல்லைத் தேய்த்து அரிசி யெடுத்துக் கொண்டு ப்நாகம் எரித்து வறுத்துக் கொண்டு அந்தப் பொரியும் பூசகமும் சமன் கூட்டி நேகப் பொடி பண்ணிக் கொம்புத் தேனில் குழப்பி அடிக்கடி கண்டவுஷ்டம் பண்ணத் தீரும்.

தாக சுரத்துக்கு கசாயம்:-

வெட்டிவேர், விலாமிச்ச வேர், செங்கழுநீர் கிழங்கு, முசுமுசுக்கை, சந்தன நன்னாரி வில்வ வேர், விஷ்ணு கிராந்தி, முத்தக் காசு, சனப்பு, கடுக்காய் அதவிலை யெல்லாஞ் சமன் கூட்டி அஷ்ட பாகமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். சுரம், தாகம் தீரும்.

பைத்தியத்துக்கு:-

பசுவின் பால், எலுமிச்சம் பழச் சாறு, இஞ்சி சாறு இது மூன்றும் கலந்து சர்க்கரையுங் கூட்டிக் கலந்து குடிக்கவும். எந்த பைத்தியமுந் தீரும். இது கை கண்டது.

தோஷத்துக்கு:- Not useful

சீதேவி செங்கழுநீர் வேர், ஆனை வணங்கி வேர், விடத் தேரம் வேர், சதிரக் கள்ளி வேர், அருகம் வேர், பிள்ளையுதைத்த வெளியில் முளைந்த செடியின் வேர் இந்த வேரை யெல்லாம் சுடு காட்டிலே முளைத்தது ஆகு தேடவும். இதுக்கு கோழி குஞ்சு பலி கொடுத்து வேரறுமல் பிடுங்கி குளிசங் கட்டவும்.

சிறு பிள்ளைகளுக்கு வெள்ளொடுப்புக்கு:-

செம்பிறண்டைக் கிழங்கப் பட்டை நறுந் தாளியிலை நார் ஐந்து மாதத்து பிள்ளைகளுக்கு மூன்று இலை ஒரு வருஷத்துப் பிள்ளைகளுக்கு ஐந்து இலை வெண்ணெயில் வேக வைத்து அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு முலைப்பாலில் வார்க்க நிற்கும். புளியிலை யீர்க்கு நருக்கி கால்படி தண்ணீரில் வசம்பு ஒரு கொட்டைப் பண்டு கூட்டி அரைத்துப் பிசைந்து வார்க்க நிற்கும்.

வரழுக்கி:

புளியீர்க்கு, இலந்தை யீர்க்கு ஒரு கொட்டை வெங்காயம் இச் வெல்லாம் அரைத்து சிறு பிள்ளைகளுக்கு வென்னீரிலே வார்க்கவும். ~~பசுங் குளி வரழுக்கி~~

பசுங் குளிவரமுடிக்கி, சிறு பிள்ளைகள் பிரிச்ச பிரிச்சென்று பீச்சிரத்துக்கு:-

நிலக் கடம்புத் தழை, வாய் பேசாமல் கொண்டு வந்து ஒரு கொட்டைப் பூண்டு வசம்பு, மிளகு, சற்றுக் கூட்டி வாய் பேசாமலரைத்து முலைப்பாலில் கொட்டைப் பாக்களவு வார்க்கவும். பிரிச்சு பிரிச்சென்று பீச்சரம் நிற்கும்.

மிருகியாய் வெளிக்குப் போறதுக்கு:-

பொடுதலைக் கொழுந்தும், காயும், மிளகும், சுடுகும், மமம், வெள்ளை வெங்காயம், வசம்பு கூட்டி அரைத்து மூன்று குளிகை பண்ணி மூன்று நாள் வார்க்கவும்.

முலை யுண்ணுத பிள்ளைகளுக்கு பட்சி தோஷமாகுல் குளிசம்:-

செவ்வாய்க் கிழமையில் சிவந்த கீரை வேரும், முலைப்பாலும் கழுதை விட்டை பிரிந்த தண்ணீரும் அரைத்து வார்க்கவும். கழுதைத் தும்பை குளிச மாடிப் போட நிற்கும்.

தோஷத்துக்கு குளிசங் கட்ட:-

விடத் தேரம் வேர் குளிச மாடிக் கட்ட நிற்கும். விடத் தேரின் மேல் புழுவையும் பூச்சிக் கூட்டையும் குளிச மாடிக் கட்ட நிற்கும். ஆண் பிள்ளைகளுக்கு பெண் கோழியும், பெண் பிள்ளைகளுக்குச் சேவல் கோழியும் பலியிட்டுக் கொண்டு வந்து கட்டவும். பிள்ளை நிமிர்ந்தழுகும். வாய் பேசாமல் கோவையிலைச் சாறு, புளியக் கூட்டு நோவு தீரும். நாயுருவி வேர், வேலிப்பருத்தி வேர், வண்ணன் துறைச் சீலையில் சுரட்டி திரியாகத் திரிச்சு நல்லெண்ணெயில் விளக்கேத்திப் பிள்ளை எதிரே வைக்க மாசும்.

பொரி கரப்பானுக்கு:-

ஒரு நாம்பு அவரையை நெருப்பாக வறுத்துப் பொடி பண்ணி வறுத்தெடுத்த விளக்கெண்ணெய் ஒரு பிடியில் போட்டு சூரிய புடம் வைத்துக் கோழியிற் போட்டு புண் கண்ட விடமெல்லாந் தடவப் பொரிஞ்சி போம்.

எறை மாந்தம் வங்க நோவுக்கு :-

ஊஞ்சப் பட்டை கொண்டு வந்து உளது நாருரிச்சுக் கொண்டு முள்ளிக் காய் மாத்திரம் எடுத்துக் கொண்டு பச்சை நெல்லுமி ஒரு சிரங்கை இது வெல்லாம் கால்படி தண்ணீரிலே ஒரு படி தண்ணீர் வார்த்து ஊறப் போட்டு ஒரு சாமத்துக்கும் பிறகு ஒரு சிரண்டி தண்ணீரெடுத்து ஒரு சங்கடை பசுவின் பாலில் கலக்கி இத்துடன் ஒரு காசிடை வெள்ளீட்டம் பால் விட்டு அவரைப் பிரமாணம் சுக்கு வெள்ளை பலம்.க, மூன்று மிளகு இது வெல்லாமரைத்துக் கலக்கி வார்க்கவும். இப்படி மூன்று நாள் வார்க்கவும். இதுக்குத் தீரும் வியாதி யிறை மாந்தம், வங்க நோவு முதலான வியாதியுந் தீரும். இது கை கண்டது.

பெரியோர்களுக்கு உஷ்ணம் அதிகமாகி வரண்டு போறதுக்கு மருந்து :-

சிறுமணக்கு கொட்டை ஒரு வள்ளம் ஒரு புதுப் பானையில் போட்டு இரண்டு வள்ளத் தண்ணீர் விட்டு அஞ்சு நாளைக்கு ஊற விட்டு வடிச்சுப் போட்டு மறு தண்ணீர் வார்த்து வேக வைத்து நிழலுலத்தாய் மூன்று நாள் உலத்தி வெய்யிலிலே ஒரு நாளுலத்தி இடித்து ஒரு வள்ளத் தண்ணீர் விட்டு இளநீர் வள்ளம்.க, விட்டு எண்ணெ ஆக்கி எண்ணெ பதத்தில் வடித்து எண்ணெயை ஒரு கலசத்திலே வார்த்து மேலாக படிகமிட்டு மூடிச் சீலை செய்து நெல்லுப் புழுக்கிற பானையில் முன் எண்ணெக் கலசத்தை வைத்து வாய்ப்பாடு மேலே யிருக்கவே வைத்து சட்டி யிட்டு மூடி நெல் லெடுக்கிற பதத்தில் எண்ணெக் கலசத்தை எடுத்து இந்தப் படி மூன்று விசை நெல்லுப் பானையில் வைத்து எடுக்கவும். பின்பு கால் பலம் சீரகம், ஏலம் பலம்.½, சர்க்கரை பலம்.½, இது மூன்றும் பொடி செய்து எண்ணெயில் போட்டு ஒரு நாள் சூரியபுடம் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு தினசரி ஒரு காசிடை கொள்ளவும். இப்படி ஒரு மண்டலங் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி உள் காச்சல், பொடியிருமல், அஸ்திசுரம், உஷ்ணம், க்ஷயம், பாண்டு காமாலை, இடுப்பு நோவு, கால் கை கடுப்பு, மண்டை நோவு சன்னி, சயித்தியம், உடம்பு இளைப்பு உப்பிசம் இவை எல்லாந் தீரும். கை கண்டது.

வெள்ளை சீதம் விழுகிற பிள்ளைக்கு :-

விடத் தோரங் கொழுந்து முள்ளிக் காய மாதிரி ஒரு கொட்டைப் பண்டு க அவரைப் பருப்பு மாதிரி சுக்கு, மிளகு.எ இது வெல்லாம் பசுவின் பாலில் வேக வைத்து அரைத்து அவிளங்காய் பிரமாணங் குளிகை செய்து நிழலிலுலத்தி வைத்துக் கொண்டு மூன்று நாளைக்கு அந்தி விடிஞ்சிரண்டு நேரமும் பசுவின் பாலில் வார்க்கவும்.

காச்சலின் மேல் நஞ்சு முறிய :-

கருஞ்சீரகம் விராகன்.½, நஞ்சு விரை, வேளைப் பட்டை, பெரு மருந்துக் கொடி வெள்ளைப் பூண்டு, ஓமம், சுக்கு வகைக்கு விராகன்.½, ஒரு படி தண்ணீர் விட்டு இந்த மருந்தெல்லாம் சட்டியிலே போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி அம்மியிலிட்டு நேக அரைத்து களச்சிக்காய் பிரமாணம் குளிகை செய்து நேரத்துக்கு ஒரு குளிகை மூன்று நாளைக்கு கொடுக்கவும். இதுக்கு பத்தியம் உப்பு புளி ஆகாது. இதுக்கு வீக்கமும், நஞ்சும் தீரும்.

மண்டை இடிப்புக்குத் தயிலம் :-

பனங்கோவைப் பழம்.8, நல்லெண்ணை மாகாணம்.க, ஓமம், மிளகு, பூண்டு, வசம்பு, மஞ்சள் வகைக்கு விராகனிடை.உ, பனங் கோவைப் பழத்தை உரிச்சு சாறெல்லா மெடுத்து எண்ணெயில் போட்டுப் பிசைந்து அடுப்பிலே வைத்துக் காச்சத் தண்ணீர் சுண்டின பதம் பார்த்து இந்தச் சரக்கெல்லாம் தூளாக நறுக்கி எண்ணெயிலே போட்டுச் சிவக்க இறக்கிக் கொள்ளவும். தலை முழுக மண்டை இடிப்பு தீரும். *

வீரியமுண்டாக மருந்து:-

அஞ்சசப் பிசிறு சாதிக்காய், ஒன்று இது இரண்டும் நசுக்கி ஒரு படி பசுவின் பாலிலே போட்டு சுண்டக் காய்ச்சி சூப்பை மேனி யிலைச் சாறு முன்று துளி விட்டுக் காய்ச்சிக் குடிக்கவும். இந்த முறையில் மூன்று நேரம் குடிக்க வீரியமுண்டாம்.

வெறிநாய் கடிச்சவனுக்கு மருந்து:-

ஒரிலைத்தாமரை இலை, மிளகும், அரைச்சு தேனில் கொடுத்தால் நிற்கும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி தள்ளவும். பத்திய முறிவு சங்கு இலை, உப்பு இவை இரண்டை யும் வறுத்துக் கொடுத்தால் முறிவு.

வீரமெழுகு:-

சவ்வீரம், முருங்கைப் பூச் சாறும், முலைப்பாலும், இதைக் சுரண்டியில் காய்ச்சி னால் குளம்பாயிருக்கும். அதில் மிளகு அளவு எடுத்துக் கொடுக்கையால் சகல சன்னியும் தீரும். இதுக்கு முறிவு பசும் பாலில் பாகலிலைச் சாறு வார்த்துக் கொடுத்தால் தீரும.

ஏலாதி குளிகை:-

சுக்கு, சீரகம், கல்நாரு, கற்பூரசிலாசித்து, லவங்கம், தாளிசபத்திரி சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், பூலாங்கிழங்கு, அசித் தகரை வேர்ப்பட்டை, வால்மிளகு, பழைய பனைவெல்லம் கட்டி குமிச்சம் பழச் சாற்றிலரைத்து ஒரு தவளிங்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு காலமே ஒன்று சாயங்காலம் ஒன்று சாப்பிட்டால் உஷ்ண வாய்வாலே வந்த வயத்து நோயெல்லாந் தீரும்.

பசி தீபனத்துக்கு மருந்து:-

தளசிப் பட்டைத் தூள் ஒரு பிடி, புங்கம் பட்டைத் தூள் ஒரு பிடி, வெள்ளைப் பசு பூலாவேர் பட்டைத் தூள் ஒரு பிடி, வெப்பாலைப் பட்டைத் தூள் ஒரு பிடி, மிளகு தூள் ஒரு பிடி, கல்லுப்பு குமராக்கு யிவையெல்லாம் தூள் செய்து வைத்துக் கொண்டு சோறு உண்ட பிறகு ஒரு பிடி அசனத்தில் ஒரு பிடி தூள் போட்டு அசனம் பண்ணவும். தீபனமுண்டாம்.

உஷ்ணத்துக்கு சமனாக்க மெல்லும் எரிப்புக்கு:-

பெரும்புளைவேர், சிறு நெருஞ்சி வேர், யானை நெருஞ்சி வேர், கத்தாளம் வேர், சிறுகீரை வேர், பழம்பாசி வேர், மூத்தக்காசு, சீந்திக் கொடி, கஞ்சாங் கோரை, சுக்கு இந்த மருந்தெல்லாம் வகைக்கு விராகனிடை கட்டி இரண்டுபடி தண்ணீர் விட்டு உழக்குத் தண்ணீராகக் காய்ச்சிக் குடிக்கவும். இரண்டு நேரமுங் குடிக்கவும்.

காச்சலின் மேல் வயறு பப்பி வலித்தால் மருந்து:-

கண்டங்கத்திரி, சீந்திக்கொடி வேலி யுலைஞ்சாவ், சதகாதேவி முறிக்க காசு முந்திரிகைப் பழம், கண்டு பறங்கி சுக்கு இது கசாயமாக்கி மூன்று நாள் குடிக்கவும்.

வாந்தி நிற்க மருந்து:-

பருத்திக் கொட்டைப் பருப்பு, லைசிசி, திப்பிலி நெல்லுப் பொரி மாவு, சர்க்கரை, தேன் இவை குழப்பிக் கொடுக்க காச்சலின் மேல் வாந்தியாகிறது அரிசியாக வாந்திக்கிறது எல்லாம் நிற்கும்.

சுரத்தின் மேல் மாங்கிஷந் தின்று தத்சேறில் நஞ்சு முறிய மருந்து:-

ஒரு அப்பு புளியிலை ஒரு அப்ப, பொன்னாங்கண்ணி சிறுகீரை வேர்,)பஞ்சாக ரெண்டு வேரு) இது வெல்லாம் ஒரு சட்டியிலே போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு முக்கால் படியாகச் சுண்டின வாறே மூன்று நாளைக்கு மூன்று வேளை குடிக்கவும் நஞ்சு முறியும்.

பிரமியத்துக்கு :-

அல்லிப்பூ வட்டத் துத்தி வேர், நீர்ப்பூலா வேர் சீந்தில் தண்டு, குமரி மடல் வல்லாரை சர்க்கரை இது கூட்டிக் குடிக்கத் தீரும்.

(இன்னும்) ஏலம், லவுங்கம், அதிமதுரம், கோஷ்டம், சாந்திர வேதி, கல்நார் இது வகைக்கொரு காசிடை சூரணம் செய்து எலுமிச்சம் பழச் சாறு பிடி, நல் லெண்ணெ ஒரு பிடி, கரும்புத் தண்ணீர் ஒரு பிடி இதில் முன் செய்த சூரணம் கூட்டி இப்படி மூன் நாள் கொள்ளத் தீரும். அமுக்கிரா வேர் வெள்ளாட்டுப் பாலில் ஏழு நாள் குடிக்கவும். கல்லுடைந்து விழும்.

காய்ச்சல், மேல் தோஷத்துக்கு :-

அகத்திப்பட்டை, விஷ்ணு காந்தி, சிறுபுள்ளை, கசாயங் காய்ச்சி மூன்று விசை கொப்பளித்து உமிழ்ந்து சற்று உள்ளுக்குங் கொடுக்கத் தோஷம் மாறியும். நவச்சாரம் சர்க்கரை இள வெந்நீரில் கொடுக்கக் கல்லெரிப்புத் தீரும்.

அதிசாரத்துக்கு :-

ரசபி, சாதிலிங்கம், கெந்தகம், வெங்காரம், திப்பிலி, சுக்கு, மிளகு இவை யெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றில் முப்பது நாளிகை அரைத்து மிளகு பிரமாணம் குளிகை செய்து நிழலுலத்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை தேனிலரைத்துக் கொடுக்கவும். அதிசார சுரந் ஒரு குளிகை கூடாதோடை கஷாயத்தில் கொடுக்க விடாத சுரந் தீரும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளியில்லாமல் வெந்நீருஞ் சோறும் கொடுக்கவும்.

(வேறு)

சுக்கு, அதிவிடயம், அபினி, ஊமத்தை விரை, இலவம் பிசின், கடுச்சிக் காய் பருப்பு, சித்திரமூலம், அத்திப்பூ இது வெல்லாம் சமபாகமாகக் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலொரு, நாளரைத்து சடைக் கஞ்சாயிலைச் சாற்றிலொரு நாளரைத்து மிளகு பிரமாணம் குளிகை செய்து நிழலுலத்தி வைத்துக் கொண்டு வெள்ளாட்டுத் தயிரிலாவது தேனிலாவது அவுரிக்காய்ச் சாற்றிலாவது ஒரு குளிகை கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி வயறு ரெத்தமாய் கழியறது, சீதமாய்க் கழியறது, நீர்ப்பாடு, சர்வமான வயறு களிச்சலுந் தீரும்.

கருப்புக்கு மருந்து :-

சாதிக்காய் விராகனிடை.உ, சாதிப்பத்திரி விராகனிடை.உ, லவுங்கம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, தம்பராஷ்டகம் விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை.உ, மாராட்டிய மொக்கு விராகனிடை.உ, கடுக்காய் விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, ஓமத்தை விராகனிடை.உ, வெள்வெங்காயக் கட்டி விராகனிடை.உ அபினி விராகனிடை.உ இது வெல்லாந் தூள் செய்து விரை தள்ளிப் போட்ட மாதளங்காயிலடை

(முடிவு இல்லை)

சித்திர வல்லாதி லேகியம் :-

1. அதிபரலைத் ததித்து நல்ல அன்பான வல்லாதியின்பமாய்ச் சொல்வேன்
சித்திர மூலம் வெள்ளருகு நல்ல சிவனார் வேம்புடன் சங்கம் வேர் குப்பி
முத்திர தேங்காயின் நெத்து நல்ல மூலமாங் கெருடன் அமுக்கிரா வேரும்
புத்தின் மேல் முளைத்த வெள்ளெருக்கம் நல்ல போதவே சிவ்னி வினாத் திருமுளம் வேரும். வே.

2. சாத்திக முளைசறவை நல்ல சாதகமான செங்கத்தாரி வேர்
உச்சித வெட்பாலை விதை நல்ல உறவான நீர் வெட் பிரப்பங் கிழங்கு
சித்த மகிழ் கருஞ்சீரகமும் நல்ல சிறப்பான காவக சீரகந்தாரும்
மக்கிய பக விஷட்சம் நல்ல மகலான வாக காப்பானின் பட்டை கான்.

3. சத்தி கெந்தகந் தூரிசு நல்ல சதிரான சூதமும் சுத்தமுஞ் சேர்த்து
சித்திரமாக வெடுத்து நல்ல சீர் பெற வகைக்கொ பலமும் நிறுத்து
முத்திய செங்கொட்டை ... நல்ல முதிரும் பறங்கிப் பட்டை பலம் ரெண்டு
விஸ்தாரமாம் பனைவெல்லம் நல்ல விளங்கிய எள்ளு சேர் வகை நிறை கொண்டு .

3. சுத்திறமாக வெடுத்து முன் கூறிதாவை நோக்கியே சீர பங் கொடுத்து
சித்திரவல்லாதி யென்ற முனி செப்பினர் சீடருக்குபதேசமாக
பத்திரமாக வெடுத்து நல்ல பாண்டத்தில் வைத்தொரு பாக்களவுண்டை
மண்டல மிருபோது கொள்ள நல்ல மார்கமாய் வியாதியை வகுத்துரைப்போமே.

5. முத்தின குலைக் கிரந்தி நல்ல முடக்குக் கடுப்புப் பிடிப்புத் திமிர்ப்பு
பத்தின மேகங்கள் வாதம் நல்ல பாங்கான கைதனிலா றல் வெடிப்பு
வத்தின வுடம்பு சிரங்கு நல்ல வகையான மிபழு வெட்டுக் கடி விடூ முதலாய்
சுத்தி மிமிர்த்த வெண்குஷ்டமம் ஒன்றும் சொல்லாமல் போமமே வல்லாதி கண்டால்.

6. பொத்தி கடிபோல் வெடித்த நல்ல புண் பேர்வுடம்பெல்லாம் வன்பா வெரித்து
கொத்திக் கிழித்து போலே மிக்க கூன பாதத்தில் கீறும் வெடித்து
அத்திக் கிரந்தி ... ருக்காய் யென்ற ஆருப் பறங்கிப் புண் ... நோயெல்லாம்
சித்திர வல்லாதி கண்டால் நல்ல சிக்கென்ற பகலி பறக்கிறாப் போலே.

7. பத்தியம் சொல்லுவேன் கேளும் நல்ல பாசிப் பயறந் துவரம் பருப்பும்
முத்தின முன் கத்திரிப் பிஞ்சும் நல்ல முருங்கையின் பிஞ்சு அரைக்கீரை ...
சாத்தாவின் பாலும் நெய் மோரும் நல்ல சதிரான வெள்ளாடு வில் மீன் விரலை
சித்திர மணக்கெண்ணையது சீரான போது முழுவீ ரெண்ணெ .

8. புத்தியாய் வல்லாதி தன்னை நல்ல போத வாகவே ரோகங்கள் கண்டு
பத்திரமாகவே கொள் நாளும் பகரமல் கூள் கண்டு பத்தியம் சொல்வேன்
உடம்பல் கண்டால்றி தீதம் நல்ல உறவான வெள்ளரி முழுது முன்னெண்ணை
யித்தனை நோய் தீருமென்று ரிஷி யின்பமாய்ச் சீடருக்குச் சொன்னவர் பாதம்
போற்றி.

<u>தேங்கா_யெண்ணை:</u>

புரசங் கொட்டை சுத்தி பண்ணின பலம்.உ, நேர்வாளம் பலம்.
நேவைப்பு பலம்.க, முத்தின தேங்காய்.1, திருகிப் பாலெடுத்து சுத்தியாக கொட்டை
களை அரைத்து பாலில் கலந்து இருப்பு போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக்
கொண்டு பெரியவர்களுக்கு 15 துளி நீராகாரத்தில் போட்டுக் கொடுக்கவும். வாய்வு
சரீரக் காரருக்கு.உ துளி போட்டுக் கொடுக்கவும். பிள்ளைகள் வயது அறிந்து
5 துளி, 7 துளி, 10 துளி, 12 துளி, நீராகாரத்தில் போட்டுக் கொடுக்கவும்.
பத்தியம் மிளகு நீர் சாதமும் சாயந்திரம், சீரகம் சுக்கு கசாயம் சாப்பிடவும்.

<u>விந்தூ_முறிவு:-</u>

நந்தியா வட்டப் பூச்சாறு விட்டு முலைப்பாலில் போட்டால் முறியும். வீரம்
இளநீர் தண்ணீரில் பத்து நாள் போட்டால் முறியும்.

<u>புதிவெட்டுக்_குஷ்டத்துக்குத்_தயிலம்:-</u>

சிவனார் வேம்பு, பூவரசம் வித்து, கற்பூர சிலாசித்து இதைக் குழித்
தயிலம், கெசபுடம் வைக்கவும். இச்சா பத்தியம்.

(வேறு)

விரியன் பாம்பு.க, ரசம் விராகனிடை.3, மூலப் புளி வள்ளம்.க, சிவனார்
வேம்பு இதைக் குழித் தயிலம் இறக்கவும். கெசபுடம் வைக்கவும். இச்சா பத்தியம்.

தேள் மருந்து:- பல்லிப் பீயில் கடைசியில் சுண்ணமிருக்கும் அதை எடுத்து வந்து கல்வ
திட்டு சித்திர மூலத் தழைச் சாறு விட்டு அரைத்துக் குளிகை செய்து நிழலுலர்த்தி

வைத்துக் கொண்டு பச்சைத் தண்ணீரில் உரைத்துக் கொட்டு வாயில் போடவும்.

சிறு பிள்ளைகள் மாந்தத்துக்கு குளிகை:-

சீரவருட பிள்ளைக்கெல்லா மருந்து வகை செப்பக் கேள் தழை வகை யில்லை வெள்ளாறை சிறுகீரை, மிளகு, தக்காளி, துத்தி, சின்னி பொடி தழை, தகரை இண்டு வறப்பலா, சிறுபுள்ளடி, சிவகரந்தை, களச்சி, நல்ல சீந்தி கஞ்சா பெருமி தும்பை சாலவளை, நீலி சுன்ரபாகல், திரிபுர மெரிந்தான் கொடிஞ்சி துளசி, முசுமுசுக்கை பூவரசு, நீர்ப்பூலா, பொன்னுவாரை, கய்யாந்தகரை, ஆவாரை, பொன்முசுட்டை பாவட்டை ஆவாரை கோவை நன்னாரி வேளை வேலிப் பருத்தி, திங்கும் லெந்தை நிலையாவாரை கீழ்காயும் நெல்லி சென்னுருவி, முசக்காதி முருக்கு சிபளை நிலா விரா சீந்தி, கண்டங்கத்திரி, நன்னாரி, பழம்பாசி, முருங்கை, நாய்த்துளசி, புன்னைக்குப் பண்டு நொச்சி தவரை கண்டு மேல்த் தழை யெல்லாம் வகைக்கு ஒரு கையளவு பொரித்து வந்து தனிச் சாறு வாங்கி மண்டலந் தன்னில் தவிலடுப்பிலோட்டை வைத்து மணல் போட்டு வருத்தச் சாறு விட்டிறக்கி சீலை வடிகட்டிச் சாறு இறக்கி அதில் பின் சரக்கு வகை கேளு. கல்ரு கொம்பு அரு கத்திச் சோறு, பெண்டுகள் பருக்கம் பாய்க் கோரை, மயிர் பின்னிக்கும் நுமை யோடு வாழைப்பழத் தோல் கருங் கம்பிளி, கொளிக்காரம், பொரிகடலைத் தோல், கருங் நவதானியம் தேங்காயின் முரும்பி கருவேம்பின் சேர்ல் இலை யெல்லாம் சுட்டுக் கருக்காக்கு மருந்து கேள். சூரகம், ஏலம், பெருங்காயம், வசம்பு, மமம், பேய்ப்புடல், சமுத்திராப் பழம், கடுக்காய், கிராம்பு, திரிசுகு, சாதிக்காய். சாதிபத்திரி, கேத்தான் விரை, சீனிக்காரம், நெய்க் கொட்டான் பழம், வெள்ளை வெங்காயம், களிப்பாக்கு, கடுகு வேசியர்கள் பழம் மஞ்சள், காட்டுச் சீரகம், மெள்ள வே பொன்னிறமாய் வறுத்து வெங்காரம் பொரிகாரம் கல்லாவி விதை உள்ளபடி சரக்கெல்லாம் வகைக்கு ஒரு விராகனிடை வாங்கி வந்து கல்வத்திலிட்டு முன் சொன்ன சாறுகள் விட்டு நாலு சாமமரைத்து ஆன பின் குளிகை கண்டு மணிப் பிரமாணம் உருட்டி நிழலில் குசுக் காய்ச்ச சகல பிள்ளைக்கு சீலி யென்று பண்டு முனி சொன்னரிம் மருந்து. இதற்கு அநுபான முலைப்பால் வெந்நீரில் கொடுக்க கொண்டிருந் தாகங் கழை யெட்டுக் கர்ப்ப பிணிகளெட்டு மாந்த மெட்டு பசுங் குளி முட்டு பெண்டுகள் கெங்கு வெளிமுட்டு வளை நோய் ஏங்கல் பிறவிச்ச முட்டடைப்பான் சகல பிணி போமே.

வங்க பற்பம்:-

கருவங்கத்தைக் கொண்டு வந்து தகடு தட்டி பொடியாகத் திரிச்சு அதைக் கல்வத்தில் போட்டு வாரண முட்டையைக் கொண்டு வந்து உடைத்து அதில் வெள்ளைக் கருவெடுத்துக் கொண்டு (மஞ்சள் கரு உதவாது) அந்தக் கல்வத்தில் முட்டை ஒடு போட்டு முதல் அரைச்சு அதுக்குப் பிற்பாடு வெள்ளைக் கருவை யுத்தி ..க சாமமரைத்து அதை நத்தாங் கொடுக்கையில் போட்டு அடைத்து 3 சீலை மண் செய்து வெய்யிலில் காய வைத்துக் குளிப் புடம் போடவும். கெசபுடம் போடவும் பற்பமாம்.

தம்பெண்ணை கடைச் சரக்கு:-

கோஷ்டம், அதிமதுரம், செம்பிரம்பட்டை, வெல்வேலம் இவை யெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொள்ளுகிறது. அதின் பிற்பாடு மணத்தக்காளி தழை கொண்டு வந்து இடித்துச் சாறு பிழிந்து வைத்துக் கொள்ளவும். அதின் பிற்பாடு சீமை அத்திப் பழம் கொண்டு வந்து சாறு பிழிந்து வைத்துக் கொள்ளவும். அதன் பிற்பாடு இரு வெங்காயம் தழுக்கு தழுச்சாய் அரிந்து வைத்துக் கொள்ளவும். அதின் பிற்பாடு ஈர வெங்காயம் தழுக்கு தழுக்காய் அரிந்து வைத்துக் கொள்ளவும். அதின் பிற்பாடு விளக்கெண்ணை கொண்டு வந்து சட்டியிலூற்றித் சற்றே அடுப்பில் வைத்து தழைச் சாறு விட்டு பழச் சாறு விட்டு முன் சொல் போட்டு

துளாவித் துளாவிக் கொண்டிருந்து சற்றே சுட்ட பிற்பாடு வெங்காயப் பொடியைப் போட்டுத் துளாவி மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு சாப்பிட்டால் மேகவூடு தணியும். வெள்ளை நிற்கும். இது கை கண்டது.

<u>கண்ணோவுக்கு:-</u> 24.10.63.

செவ்வியருவி இலை, வெங்காயம், புளி இதை யெல்லாம் நய்ய நருக்கி அதில் முலைப்பால் விட்டு பிசைந்து துணியில் வைத்துப் பிழிந்து கல்லில் உலக்கைப் பூணில் உரைத்துக் கண்ணில் பத்துப் போடவும். அதைக் கேட்கும். கை கண்டது.

<u>தாளிச பத்திரி சூரணம்:-</u>

தாளிச பத்திரி விராகனிடை. , சுக்கு விராகனிடை.10, மிளகு விராகனிடை.3 திப்பிலி விராகனிடை.8, வெள்ளை ஏலம் விராகனிடை.7, சன்ன லவங்கப் பட்டை விராகனிடை. , சுகைநீர் விராகனிடை.1 , கல்கண்டு விராகனிடை.32 இதை யெல்லாம் இள வறுப்பாய் வறுத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொள்ளவும். இதைப் பாகமறிந்து கொள்ளவும்.

<u>மண்டைக் கரப்பானுக்கு எண்ணெய்:-</u>

சமுத்திராப் பழம், வலம்புரிக்காய், சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், கடல் நுரை இதை யெல்லாம் கல்வத்தில் போட்டு நசுக்கி வைத்துக் கொண்டு அதின் பிறகு முருகு முட்டையைப் போட்டு - பிறகு கடைச் சாக்குத் தூளைப் போட்டு அடுப்பில் வைத்து பொங்கின பிற்பாடு இறக்கி இறுத்துக் கொள்ளவும். இதற்கு காதிலே சீய் வடியிறதுக்கு திரல் நிற்கும். கை கண்டது.

பூநாகம் விராகனிடை.½, கெந்தகம் விராகனிடை.½, மஞ்சள் மிளகு எண்ணெ, வெங்காயம் இதைச் சமன் கூட்டி எரித்துக் காதில் ஊத்தவும்

<u>பூறு எண்ணெய்: ஏலே மூலிக்கை:-</u>

சங்கன் குப்பியிலைச் சாறு, பாவட்டை யிலைச் சாறு, கருநொச்சி யிலைச் சாறு, சிறந்தி நாயகம், யிலைச் சாறு, காட்டுக் கோவை யிலைச் சாறு, காட்டு மல்லிகை யிலைச் சாறு இதை யெல்லாம் இடித்துப் பிழிந்து வைத்துக் கொண்டு மறக்கிப் பட்டை விராகனிடை.½, வால் மிளகு விராகனிடை.½, தாளிச பத்திரி விராகனிடை.½, சன்ன லவங்கப் பட்டை விராகனிடை.½, லவங்கம் நச்சி விடை விராகன்.½, கோஷ்டம்.½, கருஞ்சீரகம்.½, தானிக்காய்.½, சிறுநாகப்பூவு.½, கார்போகரிசி.¼, பிரப்பங் கிழங்கு.¼, சாதிபத்திரி.2¼, குரசாணி ஓமம்.¼, மெருகன் கிழங்கு.½, கொடிவேலி முங்கு.¼. சிவேர் வேம்பு.¼ இதை யெல்லாம் இடித்து தூள் செய்து அந்த எண்ணெயில் போட்டுத் துளாவி பொங்கி வரும் போது அந்த ஈர வெங்காயம் அரிஞ்சி போட்டு துளாவி இறக்கும் போது பதம் வரும் போது அந்தக் கொத்தமல்லியை அந்த எண்ணெயில் போட்டு வாசம் வரும் அப்போது அந்த எண்ணெயை யெடுத்து வைத்துக் கொள்ளவும். இதற்குப் பத்தியம் உப்பு புளி ஆகாது.

<u>முக சன்னிக்கு திரிச்சல்:-</u>

சுக்கு, மிளகு, திப்பிலி, சதகுப்பை, மரமஞ்சள், கற்பூரம், ரசம், மஞ்சிலை மஞ்சள் இதை யெல்லாம் ஒரு விராகனிடைக்கு நறுக்கிக் கொண்டு மணியிலைச் சாறு விட்டு அரைத்து திரிச்சல் பண்ணி முகர்ந்தால் வன்னி தோஷமும் முறியும்.

<u>விஷசுரத்து மேல் தோஷ தாகத்துக்கு:-</u>

சுக்கு, மிளகு, கொத்தமல்லி, கடுக்காய், தானிக்காய், சங்கம் வேர், கண்டங்கத்திரி வேர் இதையெல்லாம் இடித்து இள வறுப்பாய் வறுத்து ஒரு செம்பு தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொடுத்தால் நிற்கும் தாகம்.

<u>நாவு வறண்டதுக்கு மருந்து:-</u> கலைமான் கொம்பு, நற்பவளம், உத்திராட்சம், வெள்ளி

பொன், மயிலிறகு, நெருப்பில் சுட்டு முலைப்பாலில் இதை யெல்லாம் உரைத்து மத்தித்து நாக்கில் தடவவும். கொப்புளில் சீலைத் துணியில் படிச்சுப் போடவும். தாகம் நிற்கும்.

தலைப் பிரட்டிரி:-

ஜாதிச் செந்தூரம் பலம்.க, மிருதார் சிங்கி பலம்.ரு, சாரசு சபேதா பலம்.ரு, நல்லெண்ணெய் படி.1/16 இதை யெல்லாம் கல்வத்திலிட்டு நறுக்கி வைத்துக் கொண்டு ஒரு அகல் சட்டி அடுப்பில் வைத்து நல்லெண்ணெய் முன்னே விட்டு ஜாதிச் செந்தூரத்தைப் போட்டுத் ஆவி வரும் போது சபேதாவைப் போட்டுத் ஆவி அடங்க பிற்பாடு மிருதார் சிங்கைப் போட்டுத் ஆவி வரும் போது அதினுடைய பதமெப்படி

மெழுகு பொட்டிஉப்புக் காய்ச்சிக் கீழே விட்டால் மெழுகு பதத்திலிறக்கவும். அதின் பிற்பாடு சட்டியில் தண்ணீர் வைத்து அதில் தொட்டாங் கச்சியை வைத்த தண்ணீரில் அத்தவும்.

காதிற் சீழ் விழுகிறதுக்கு:-

முத்தின புளியம் பிரண்டை, முதத்தின புங்சம் பட்டை, செம்பு ஒரு தலைப் பண்டு, இதை யெல்லாம் நருக்கி நல்லெண்ணெயில் போட்டு கொதிப்பித்து வைத்துக் கொண்டு காதில் புளியச் சீழ் மாறும்.

வாயுவுக்கு லேகியம்:-

தானிக்காய், கர்க்கடகசிங்கி, மரமஞ்சள், கோஷ்டம், ஏலம், திரிகடுகு, இந்துப்பு, சிறுதேக்கு, கண்டங்கத்திரி, வகைக்கு சமன் கட்டி மிஞ்சிச் சாதம் தேனும் சமனாக கட்டி லேகியம் பிசைக்கு வைத்துக் கொண்டு அதில் காந்த செந்தூரம் இழைக்கவும்.

பசு முடிக்கி:-

கீழா நெல்லியிலை, அம்மாம் பச்சரிசியிலை, வேலங் கொழுந்து, ஆவாரங் கொழுந்து, விடத் தேரரங் கொழுந்து, நல்ல சீரகம், சாதிக்காய், கசகசா, வெரிசி சன்ன லவங்கப் பட்டை (முடிவு இல்லை)

சிலந்திக்குச் சூரணம்:-

பழைய மாங்கொட்டையைத் தட்டி உள் பருப்பு எடுத்து நறுக்கி அதில் அயச் செந்தூரம் போட்டுக் கொடுத்தால் நிற்கும். இல்லா விட்டால் சும்மா கொடுத்தாலும் நிற்கும். கை கண்டது.

கடைச் சரக்கு ஓமம், வெந்தயம், சுண்ட வத்தல், ஏலம், தானிக்காய், நெய் மேற்கண்ட மருந்தோடே சுட்டவும்.

வாலை ரச பற்பம்:-

ரசம் எடுத்து அழிக் கல்லிப் போட்டு கண்டங் கத்திரி யிலை பழச் சாறு படி.1/8 அல்லை இலை சமூலம் இடித்து பிழிந்த சாறு கத்தி அரைப்பு. சாமம் அரைத்து வில்லை தட்டி வெயிலில் காயப் போட்டு புடம் ஒரு முட்டை.40 வைத்துக் கொடுக்கவும். பற்பமாகும். இதை யெடுத்து புன்னாவில் வைத்துக் கொண்டு வெண்ணெயி லாவது நெய்யிலாவது சாப்பிடவும். இதுக்கு மேக வாய்வெல்லாந் தீரும்.

காமாலைக்கு:-

கிரிசிலாங் கண்ணி கொட்டைக் கொழுந்து நீர் முள்ளி தண்டு மிளகு இவை சமன் கட்டி அரைத்து குளிகை செய்து உலர்த்தி காலை, மாலை ஆறு நாள் கொடுக்கவும். பத்தியம் புளி ஆகாது.

கக்குவாயுக்குப் பதங்கம்:-

சுக்கு காசிடை.க, மிளகு.க, திப்பிலி.க, சித்தரத்தை.க, அதிமதுரம்.க, பனைவெல்லம் காசிடை.உ, கடுக்காய்.உ, தானிக்காய் இந்தக் கடைச் சரக்கெல்லாம்

இள வறப்பாய் வறுத்துக் கொண்டு அதின் பிறகு பச்சைக் கருக்காய்.உ, போட்டு அந்தச் சரக்கோடே இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு நல்ல சட்டி அடுப்பில் வைத்து முடக் கொத்தான் கெ ஞர்ச இலை கொண்டு வர்ச அந்தச் சட்டியில் போட்டுப் பசு நெய்யை வார்த்து அதை கசக்கி வதக்கி மெழுகு பதத்தில் அந்த சூரணக் கொட்டி அதின் பிறகு பனைவெல்லம் போட்டுக் கிளறி யெடுத்து கல்வத்தில் போட்டு அரைத்து குகை பண்ணி வைத்துக் கொள்ளவும். அதை இருமலுக்கு கொடுக்கலாம். கை கண்டது.

****

எ.ச:24.10.63. முற்றும்

****

Verification completed on 4-12-1963

Sundaranandam

4/12/63